07.01.2025

OS No: 125/2022

வா.சா. 1 திருமதி. மாலதி க/பெ. குமரேசன்

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

பிரதிவாதி குமரேசன் எனக்கு என்ன உறவு என்றால் அண்ணன் ஆவார். என்னுடன் பிறந்த சகோதரி யார் என்றால் என்னுடன் பிறந்த சகோதரி சுமதி ஆவார். தாவா சொத்திற்கான சர்வே எண் என்ன என்றால் 834 ஆகும். தாவா சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 3 1/2 செண்ட் ஆகும். தாவா சொத்தை நான் கிரையம் பெறுவதற்கு முன்பு யாருக்கு பாத்தியமாக இருந்தது என்றால் ஆறுமுகம், சித்ரா ஆகியோருக்கு பாத்தியமானது. எனக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 20.08.2004ம் தேதி நடைபெற்றது. நிருபணவாக்குமூலத்தில் எனது வயது 30 எனக்குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல 42 வயது எனக்கு ஆகிறது. தாவா சொத்தை எவ்வளவு ரூபாய்க்கு கிரையம் பெற்றேன் என்றால் ரூ.50,000/-க்கு கிரையம் பெற்றேன். எந்த வருடம் கிரையம் பெற்றேன் என்றால் 03.12.2014ம் தேதியன்று கிரையம் பெற்றேன். 12.06.2006ம் தேதியன்று எனக்கு குழந்தை பிறந்தது. எனது கணவர் என்னை விட்டு எப்போது பிரிந்து சென்றார் எங்களுக்கு குழந்தை பிறந்து 6 மாதகாலத்தில் 2007ம் வருடவாக்கில் பிரிந்து சென்றார். எனது கணவர் என்னை விட்டு பிரிந்து சென்றவுடன் நான் எனது தாய், தந்தையுடன் தான் இருக்கிறேன் என்றால் சரிதான். நான் வேலைக்கு எதுவும் செல்லவில்லை என்றால் சரியல்ல, ஆடு, மாடு மேய்த்தும், கோழிகள் வளர்த்தும் அவ்வப்போது கூலி வேலைக்குச் சென்றும் கிடைக்கும் வேலைகளை பார்த்து வந்தேன். நான் எந்த வேலைக்கும் செல்லவில்லை என்றும், என்னை எனது அண்ணன் குமரேசன் தான் பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. எனது குழந்தையை ஆங்கிலப்பள்ளியில் எனது அண்ணன் தான் படிக்கவைத்ததார் என்றால் சரியல்ல, நான் தான் படிக்க வைத்தேன். எனது அண்ணன் 1990ல் பெங்களூர் சென்றுவிட்டார் என்றால் சரிதான். எனது அண்ணன் 8ம் வகுப்பு படிப்பை நிறுத்திவிட்டு பெங்களூர் சென்றார் என்றால் சரிதான். எனது அண்ணன் கையில் டீ கேனை எடுத்துக்கொண்டு

வேலை பார்த்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது அண்ணன் சம்பாதித்த பணத்தை அவருடைய அப்பாவிற்கு கொடுத்துவந்தார் என்றால் சரிதான். எனது அண்ணன் சம்பாதித்த பணத்தைக்கொண்டு எனது அப்பா எனது அண்ணன் பெயரில் சொத்து கிரையம் வாங்கி கொடுத்தாரா என்றால் ஆமாம், போர் போட்டது எனக்கு தெரியும், ஒரு இடமானது வீட்டுடன் வாங்கியது எனக்கு தெரியும். எனது அப்பா ஊருக்குள் வட்டிக்கு பணம் கொடுத்து வந்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். நான் கிரையம் வாங்கிய சொத்தை கிரையம் வாங்கிய சமயத்தில் எனது அப்பா வீட்டுடன் தான் இருந்தேன் என்றால் சரிதான். எனது அண்ணன் அனுப்பிய பணத்தைக் கொண்டு எனது அப்பா எனது அண்ணனுக்கு சொத்து வாங்குவதாக சொல்லி, அண்ணனுக்கு சொத்து வாங்காமல் எனக்கு வாங்கித்தந்தார் என்றால் சரியல்ல. எனது கிரையச் சொத்திலுள்ள வீட்டையும் எனது அண்ணன் கொடுத்த பணத்தில் தான் எனது அப்பா எனக்கு கட்டிக் கொடுத்தார் என்று சொன்னால் என்றால் சரியல்ல. எனது அண்ணனுக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 2008ல் திருமணம் நடைபெற்றது. எனது அண்ணன் திருமணம் செய்து கொண்ட பெண் வீட்டார் வசதியானவர்கள் என்றால் சரிதான். எனது அண்ணனுக்கு திருமணத்தின் போது அவரது மனைவிக்கு நகை கொடுத்தார்களா என்றால் எனது அப்பாவைத்தான் கேட்க வேண்டும். எனது அண்ணனின் மனைவிக்கு திருமணத்தின் போது நகை போட்டார்கள் என்றும் மேற்படி நகையை எனது அண்ணன் எங்களது வீட்டில் வைத்து விட்டுத்தான் பெங்களூர் சென்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் பிறந்த எனது அப்பா வீட்டில் வைத்துச் சென்ற எனது அண்ணன் மனைவியின் நகை காணாமல் போன விபரம் தெரியுமா என்றால் எனது அம்மா சொல்லித்தெரியும். என் மீதும், எனது அக்கா, மற்றும் அப்பா மீது நகையை நாங்கள் தான் எடுத்ததாக சொல்லி போலிசில் எனது அண்ணன் புகார் கொடுத்தாரா என்றால் நாங்கள் எடுத்ததாக புகார் கொடுக்கவில்லை ஆனால் புகார் கொடுத்தார். காவல் நிலையத்தில் எனது அக்கா மகள்

போலிசாரிடம் தனது தாத்தாவான எனது அப்பா 6 பவுன் நகை தனக்கு கொடுத்ததாக சொன்னாரா என்றால் எனக்கு தெரியாது. காவல் நிலையத்தில் எனது சகோதரி எனது அப்பா 21 பவுன் நகை தனக்கு கொடுத்ததாகவும் அதனை திருப்பி கொடுத்துவிடுவதாக சொல்லியிருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, என்னை போலிசார் விசாரணை செய்தார்களா என்றால் விசாரித்தார்கள். பாக்கி நகை என்னிடம் உள்ளது என்றும், அதை திருப்பி தந்து விடுவதாக சொன்னதின் அடிப்படையில் போலிசார் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அதன் பிறகு தாவா வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல பூர்வீக சொத்தை கேட்டு பிரச்சனை செய்ததால் தான் தாவா வழக்கு போட்டுள்ளேன். நகை பிரச்சனை ஏற்பட்ட போது தான் தாவா சொத்து எனது பெயரில் வாங்கிய விபரமும் எனக்காக எனது அப்பா வீடு கட்டி வந்த விபரமும் பிரதிவாதிக்கு தெரியவந்தது என்றால் தெரியும். தாவா வீட்டை தச்சு செய்த அன்று ரூ.4,50,000/- பிரதிவாதி தான் எனது தந்தைக்கு கொடுத்தார் என்றால் சரியல்ல. அவ்வபோது சிறிது சிறிதாக பணம் கொடுத்து ரூ.11லட்சம் வரை எனது அண்ணன் செலவு செய்து எனது அப்பா எனது அண்ணனுக்காக வீடு கட்டினார் என்றால் சரியல்ல. நகை பிரச்சனை ஏற்பட்ட காரணத்தினால் மேற்படி வீட்டை முழுமையாக கட்டி முடிப்பதற்கு முன்பே என்னை மேற்படி வீட்டில் எனது அப்பா குடிவைத்துவிட்டார் என்றால் சரியல்ல. என்னை தாவா வீட்டில் குடி வைத்த போது என்ன நிலையில் மேற்படி வீடு இருந்ததோ அதே நிலையில் தான் தற்போதும் உள்ளது என்றால் சரிதான். நகை பிரச்சனை ஏற்பட்டதிலிருந்து ஊருக்குள் என் அண்ணன் வருவதில்லை என்றால் சரியல்ல, ஊருக்குள் தான் உள்ளார். நகை பிரச்சனைக்கு பிறகு எனது அண்ணன் எந்தப்பணத்தையும் எனது அப்பாவிற்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். எனது அண்ணன் பணம் எதுவும் எனது அப்பாவிற்கு கொடுக்காத காரணத்தினால் தான் தாவா வழக்கு வீடானது முழுமையடையாமல் உள்ளது என்றால் சரியல்ல, வழக்கு நடைபெறுவதால் தான் வீட்டைக்கட்டுவதற்கான வேலை

நடைபெறாமல் உள்ளது. வழக்குச் சொத்தை நான் கிரையம் பெற்ற சமயத்தில் எனது மகனுக்கு என்ன வயது என்றால் 13 வயது. தாவா வழக்கில் எவ்வளவு செலவு செய்து வீடு நான் கட்டியுள்ளேன் என்ற விபரம் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன் ரூ.2லட்சம் செலவு செய்துள்ளேன். என் கணவர் தற்போது எங்குள்ளார் என்றால் எனக்கும், அவருக்கும் சம்மந்தமில்லை அதனால் எனக்கு தெரியாது. தாவா வழக்குச் சொத்தை கிரையம் பெறக்கூடிய வசதி எனக்கு இல்லை என்றும், எனது அண்ணன் அனுப்பிய பணத்தைக் கொண்டு தாவா சொத்து எனது பெயரில் கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள வீட்டை நான் கட்டவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

R PANDY Digitally signed by R PANDY Date: 2025.01.07 17:09:44 +0530